NSW GOVERNMENT Education Public Schools

## The Common Grade Scale for Preliminary Courses

# முதனிலைப் பாடத்திட்டங்களுக்கான பொதுத் தரநிர்ணயங்கள்

கீழே காட்டப்பட்டுள்ள பொதுத் தரநிர்ணயங்கள் NSW இலுள்ள சகல பாடசாலைகளிலும் முதனிலைத் தரம் 6 இல் (Preliminary Stage 6 year) மாணவர்களின் பெறுபேறுகளை அறிவிக்க பயன்படுத்தப்படுகின்றன.

பொதுத் தரநிர்ணயங்கள் ஒவ்வொரு 5 படிநிலைகளிலும் உள்ள செயல்திறன்களை விவரிக்கின்றன.

| தரம் | முதனிலைப் பாடத்திட்டங்களுக்கான பொதுத் தரநிர்ணயங்கள் |
|---|---|
| A | மாணவர், பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் கோட்பாடுகள் பற்றிய விரிவான அறிவையும் அதன் விளக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். மேலும் அவற்றைப் பல்வேறு சூழ்நிலைகளில் பிரயோகிப்பதற்கான மிகவும் உயர்ந்த நிலையில் விருத்தியடைந்த திறன்களையும் பெற்றுள்ளார். மேலும் மாணவர் அறிவார்ந்த பகுப்பாய்வு மற்றும் மதிப்பாய்வுகளை உபயோகித்து புத்தாக்கத் திறன்களையும் திறனாய்வு ஆற்றல்களையும் வெளிக்காட்டுகிறார். மாணவர் சிக்கலான கருத்துக்களையும் தகவல்களையும் செயற்திறன் மிக்க முறையில் தெரிவிக்கிறார். |
| B | மாணவர், பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் கோட்பாடுகள் பற்றிய தீர்க்கமான அறிவையும் அதன் விளக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். மேலும் அவற்றைப் பல்வேறு சூழ்நிலைகளில் பிரயோகிப்பதற்கான நன்கு விருத்தியடைந்த திறன்களையும் பெற்றுள்ளார். மேலும் மாணவர் பகுப்பாய்வு மற்றும் மதிப்பாய்வுகளை உபயோகித்து புத்தாக்கத் திறன்களையும் திறனாய்வு ஆற்றல்களையும் வெளிக்காட்டுகிறார். மாணவர் சிக்கலான கருத்துக்களையும் தகவல்களையும் தெளிவான முறையில் தெரிவிக்கிறார். |
| C | மாணவர்,பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் கோட்பாடுகள் பற்றிய சிறந்த அறிவையும் அதன் விளக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். மேலும் அவற்றைப் பரீட்சயமான பல்வேறு சூழ்நிலைகளில் பிரயோகிப்பதற்கான திறன்களையும் பெற்றுள்ளார். மேலும் மாணவர் தகவல்களைத் திரட்டுவதற்கும் ஒருங்கினைப்பதற்குமான ஆற்றல்களை வெளிப்படுத்துகிறார், அத்துடன் பொருத்தமான கருத்துக்களையும் சரியான முறையில் தெரிவிக்கிறார். |
| D | மாணவர், பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் பற்றிய அடிப்படை அறிவையும் அதன் கோட்பாடுகள் பற்றிய விளக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். மேலும் அவற்றை பரீட்சயமான சில சூழ்நிலைகளில் பிரயோகிப்பதற்கான திறன்களையும் பெற்றுள்ளார். மேலும் மாணவர் தகவல்களைத் திரட்டுவதற்கும் பயன்படுத்துவதற்குமானமான ஆற்றல்களை வெளிப்படுத்துகிறார், அத்துடன் கருத்துக்களை விளக்கும் முறையில் தெரிவிக்கிறார். |
| E | மாணவர், பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் பற்றிய ஆரம்ப அறிவையும் அதன் கோட்பாடுகள் பற்றிய விளக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். மேலும் சில திறன்களையும் செயன்முறைகளையும் வழிகாட்டலின்படி பிரயோகிக்கின்றார். மேலும் மாணவர் தகவல்களைத் விவரிப்பதிலும் கருத்துக்களைத் தெரியப்படுத்துவதிலும் தொடக்கநிலை ஆற்றல்களை வெளிப்படுத்துகிறார். |

| Grade | Common Grade Scale for Preliminary Courses |
|---|---|
| A | The student demonstrates extensive knowledge of content and understanding of course concepts, and applies highly developed skills and processes in a wide variety of contexts. In addition the student demonstrates creative and critical thinking skills using perceptive analysis and evaluation. The student effectively communicates complex ideas and information. |
| B | The student demonstrates thorough knowledge of content and understanding of course concepts, and applies well-developed skills and processes in a variety of contexts. In addition the student demonstrates creative and critical thinking skills using analysis and evaluation. The student clearly communicates complex ideas and information. |
| C | The student demonstrates sound knowledge of content and understanding of course concepts, and applies skills and processes in a range of familiar contexts. In addition the student demonstrates skills in selecting and integrating information and communicates relevant ideas in an appropriate manner. |
| D | The student demonstrates a basic knowledge of content and understanding of course concepts, and applies skills and processes in some familiar contexts. In addition the student demonstrates skills in selecting and using information and communicates ideas in a descriptive manner. |
| E | The student demonstrates an elementary knowledge of content and understanding of course concepts, and applies some skills and processes with guidance. In addition the student demonstrates elementary skills in recounting information and communicating ideas. |